RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023- 2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-3 இதழ்-364 31 டிசம்பர் செவ்வாய்க்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

## அதிமுக பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி கிடைக்கும் வரை அதிமுகவின் போராட்டம் தொடரும்: இபிஎஸ்

சென்னை, டிச.31

"அண்ணா பல்கலைக்கழக வளாக பாலியல் வன்கொடுமை வழக்கில் அனைத்து உண்மைக் குற்றவாளிகளும் பிடிபட்டு பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி கிடைக்கும் வரை அதிமுகவின் போராட்டம் தொடரும்! இந்த வழக்கில் ஞானசேகரன் குறிப்பிட்ட அந்த நபர் யார்?" என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் இபிஎஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.



அண்ணா பல்கலைக்கழக சம்பவம் தொடர்பாக தமிழகம் முழுவதும் அதிமுகவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சென்னை உள்பட பல்வேறு இடங்களிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வரும் அதிமுகவினர் கைது செய்யப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் அண்ணா பல்கலைக்கழக சம்பவத்தில் நீதி கேட்டும், அதிமுகவினர் கைதைக் கண்டித்தும் எடப்பாடி பழனிசாமி கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "அண்ணா பல்கலை வளாக பாலியல் வன்கொடுமையில் பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி வேண்டியும், தமிழ்நாட்டில் தொடர்ந்து சிறுமிகள், கல்லூரி மாணவிகள், பெண்கள் பாதுகாப்பை கேள்விக் குறி ஆக்கியுள்ள ஸ்டாலின் மாடல் அரசைக் கண்டித்தும், அதிமுக சார்பில் தமிழ்நாடு முழுவதும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் நிலையில், ஆர்ப்பாட்டத்தில் சென்று கலந்து கொண்ட கழகத்தினரை காவல்துறையினர் கைது செய்து அராஜக அடக்க முறையில் ஈடுபட்டு வருகின்றனர், மக்கள் குரலின் பிரதிபலிப்பான எதிர்க்கட்சியின் குரலை ஒடுக்க முயலும் ஸ்டாலின் மாடல் அரசுக்கு எனது கடும் கண்டனம்.

கள்ளக்குறிச்சி கள்ளச்சாரய வழக்கில் திமுகவை சேர்ந்தவர், போதைப்பொருள் மாபியா வழக்கில் திமுக அயலக அணி மாவட்ட அமைப்பாளர், என நீளும் திமுக நிர்வாகிகளின் குற்றப்பின்னணியாலும், ஞானசேகரன் குறித்து வெளிவரும் புகைப்படங்கள் மற்றும் தகவல்களாலும், திமுக அரசு இந்த வழக்கிலும் ஏதேனும் அரசியல் தலையீடு ஏற்படுத்துமோ என்ற சந்தேகம் நாளுக்கு நாள் வலுக்கிறது.

அனைத்து உண்மைக் குற்றவாளிகளும் பிடிபட்டு பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி கிடைக்கும் வரை அஇஅதிமுகவின் போராட்டம் தொடரும்! இந்த வழக்கில் ஞானசேகரன் குறிப்பிட்ட அந்த நபர் யார்?" எனக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக நேற்று, மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரத்தில் யார் அந்த சார்? என அதிமுகவினர் ஆங்காங்கே போஸ்டர்களை ஒட்டி பரபரப்பை ஏற்படுத்தினர். மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில், ஞானசேகரன் செல் போனில் பேசியபோது சார் (sir) என்ற வார்த்தையை பயன்படுத்தியிருந்தார். ஆனால் போலீஸார் அது திசை திருப்புவதற்காக சும்மா பயன்படுத்தியுள்ளார் என தெரிவித்துள்ளனர் என்பது அதிமுகவின் குற்றச்சாட்டு. இதை சுட்டிக் காட்டியே அதிமுக தலைவர்கள் யார் அந்த சார்? என கேள்வி எழுப்பி வருகின்றனர்.

## "பெண்களுக்கு அண்ணனாக, அரணாக இருப்பேன்" தவெக தலைவர் விஜய் கடிதம்

சென்னை, டிச.31

"எல்லா சூழல்களிலும், நிச்சயமாக உங்களுடன் நான் உறுதியாக நிற்போன் அண்ணனாகவும், அரணாகவும். எனவே, எதைப் பற்றியும் கவலை கொள்ளாமல் கல்வியில் கவனம் செலுத்துங்கள்டிச.31பாதுகாப்பான தமிழகத்தைப் படைத்தே தீருவோம்." என்று தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் கைப்பட எழுதி வெளியிட்டுள்ள கடிதத்தில், "'அன்புத் தங்கைகளே! கல்வி வளாகம் முதற்கொண்டு, ஒவ்வொரு நாளும் தமிழத்தில் தாய்மார்கள் என்னருமைத் தங்கைகள், பெண் குழந்தைகள் என அனைத்துத் தரப்பும் பெண்களுக்கும் எதிராக நடக்கும் சமூக அவலங்கள், சட்டம் ஒழுங்கு சீர்கேட்டு அவலங்கள், பாலியல் குற்றங்கள் என்று பல்வேறு வன்கொடுமைகளைக் கண்டு, உங்கள் அண்ணனாக மன அழுத்தத்திற்கும் சொல்லொனா வேதனைக்கும் ஆளாகிறேன்.

யாரிடம் உங்கள் பாதுகாப்பை கேட்பது? நம்மை ஆளும் ஆட்சியாளர்கள எத்தனை முறை கேட்டாலும் எந்தப் பயனுமில்லை என்பது நெரிந்ததே.

அதற்காகவே இக்கடிதம்.. எல்லா சூழல்களிலும், நிச்சயமாக உங்களுடன் நான் உறுதியாக நிற்போன் அண்ணனாகவும், அரணாகவும். எனவே, எதைப் பற்றியும் கவலை கொள்ளாமல் கல்வியில் கவனம் செலுத்துங்கள். பாதுகாப்பான தமிழகத்தைப் படைத்தே தீருவோம். அதற்கான உத்தரவாதத்தை நாம் அனைவரும் இணைந்தே விரைவில் சாத்தியப்படுத்துவோம்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யாத திமுக அரசை கண்டித்து தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை சாட்டையடி போராட்டம் நடத்தினார். அதிமுக 'யார் அந்த சார்?' என்ற போஸ்டர்களை ஒட்டி போராட்டம் நடத்தியதோடு, இன்று கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறது. நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானும் அண்ணா பல்கலைக்கழ வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதைக் கண்டித்துள்ளார். ஏற்கெனவே இச்சம்பவம் குறித்து கண்டன அறிக்கை வெளியிட்டிருந்த விஜய் இன்று (டிச.30) தன் கைப்பட கடிதம் ஒன்றை எழுதி கவனம் ஈர்த்துள்ளார்.

## பஞ்சாப் பந்த்: விவசாயிகளின் சாலை மறியல், ரயில் மறியல் பல இடங்களில் போக்குவரத்து பாதிப்பு

சண்டிகர், டிச.31

பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டப்பூர்வ உத்தரவாதம் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பஞ்சாபில் விவசாய சங்கங்கள் நடத்தி வரும் முழு அடைப்பு போராட்டம் காரணமாக மாநிலத்தில் இயல்பு வாழ்க்கை முடங்கியது.



பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை(எம்எஸ்பி)க்கு சட்டப்பூர்வ உத்தரவாதம் வழங்க வேண்டும் என்பது உள் ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சம்யுக்தா கிசான் மோர்ச்சா(அரசியல் சார்பற்றது) மற்றும் கிசான் மஸ்தூர் மோர்ச்சா ஆகிய விவசாய சங்கங்கள் இன்று (திங்கள் கிழமை) முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்திருந்தன. காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை முழு அடைப்புப் போராட்டம் நடைபெறும் என்று அந்த சங்கங்கள் அறிவிப்பு விடுத்திருந்தன. விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் விவசாயி ஜக்கித் சிங் தலேவாலுக்கு ஆதரவாக இந்த பந்த்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இதையடுத்து, பேருந்து போக்குவரத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஜலந்தர், மொஹாலி, ஷாம்பு உள்ளிட்ட பல மாநகரங்கள் மற்றும் நகரங்களில் உள்ள பெரும்பாலான தேசிய நெடுஞ்சாலைகள் மூடப்பட்டிருப்பதால், வெளியூர் செல்லும் பயணிகளும், அலுவலகம் செல்வோரும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பந்த் காரணமாக பல பள்ளிகள் மற்றும் அலுவலகங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

பயணிப்பதைத் தவிர்க்குமாறும் அல்லது இணைப்புச் சாலைகள் வழியாகச் சென்று அவர்கள் சேருமிடங்களுக்குச் செல்லுமாறும் போலீஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். மொஹாலி, பாட்டியாலா, லூதியானா, மோகா, ஃபெரோஸ்பூர், பதிண்டா, ஹோஷியார்பூர், ஜலந்தர் மற்றும் பிற இடங்களில் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன.

தங்கள் கோரிக்கைகளுக்கு ஆதரவாக முழு அடைப்பு போராட்டத்தில் இணைவதாக பெரும்பாலான ஊழியர் சங்கங்கள், வர்த்தகர்கள் மற்றும் டிரான்ஸ்போர்ட் நிறுவனங்கள் உறுதி அளித்துள்ளதாக விவசாயசங்கங்கள் தெரிவித்துள்ளன.

மருத்துவ சேவைகள் போன்ற அவசர சேவைகள், விமான நிலையம் செல்லும் பயணிகள், திருமண விழாக்களுக்குச் செல்லும் வாகனங்கள், தேர்வுக்குச் செல்லும் மாணவர்கள் உள்ளிட்டோர் அனுமதிக்கப்படுவார்கள் என்று கிசான் மஸ்தூர் மோர்ச்சா தலைவர் சர்வான் சிங் பந்தேர் தெரிவித்திருந்தார். அந்த வகையில், அத்தியாவசிய சேவைகள் தடையின்றி தொடர்கின்றன.

## கல்வியில், வேலைக்குச் செல்வதில் தமிழ்நாட்டுப் பெண்கள் 'டாப்' முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

தூத்துக்குடி, டிச.31

"மதிப்பெண் வாங்குவதில் தமிழ்நாட்டு பெண்கள் டாப். நாட்டிலேயே உயர்கல்வியில் அதிகம் சேர்வதில் தமிழ்நாட்டு பெண்கள்தான் டாப். வேலைக்கு செல்வதிலும் தமிழ்நாடு பெண்கள் டாப். இதுதான் பெரியார் கண்ட கனவு." என்று தூத்துக்குடியில் நடந்த புதுமைப் பெண் விரிவாக்கத் திட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார்.



அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்று உயர் கல்வியில் சேரும் மாணவிகளுக்கு ரூ.1,000 வழங்கும் புதுமைப் பெண் திட்ட விரிவாக்கத்தை முதல்வர் ஸ்டாலின் இன்று (திங்கள் கிழமை) தொடங்கி வைத்தார். இந்த திட்டத்தால் 75,028 மாணவிகள் பயனடைவார்கள்.

திட்டத்தை தொடங்கி வைத்து முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: ஆயிரக்கணக்கான மாணவிகளை ஒரே இடத்தில் பார்க்கும் போது ஒரு திராவிடியன் ஸ்டாக் (Dravidian Stock)-காக பெருமையடைகிறேன். இதற்கு நேர் எதிராக ஒரு ஸ்டாக் இருக்கு. அது சாதி, மதம் என நம்மை பிரிக்கும் ஸ்டாக். வளர்ச்சியை பற்றி சிந்திக்காமல் வன்முறையை தூண்டிவிடும் வன்மம் பிடித்த Stock. பெண்கள் வீட்டில்தான் இருக்க வேண்டும் என்ற மனுவாத சிந்தனையை இந்த காலத்திலும் பேசிக்கொண்டு இருக்கும் காலவதியான ஸ்டாக்.

மதிப்பெண் வாங்குவதில் தமிழ்நாட்டு பெண்கள் டாப். நாட்டிலேயே உயர்கல்வியில் அதிகம் சேர்வதில் தமிழ்நாட்டு பெண்கள்தான் டாப். வேலைக்கு செல்வதிலும் தமிழ்நாடு பெண்கள் டாப். இதைத்தான் தந்தை பெரியார் நினைத்தார்.

அனைத்து மக்களுக்கும் கட்டாயக் கல்வி சட்டத்தைக் கொண்டு நீதிக்கட்சி கொண்டு வந்தது. பட்டியலின மாணவர்களை அனைத்துப் பள்ளிகளிலும் சேர்க்க நீதிக்கட்சி உத்தரவிட்டது. கல்விக்கான ஏராளமான முன்னெடுப்புகளை நீதிக்கட்சி மேற்கொண்டது. காமராஜர் ஆட்சியில் அதிகப்படியான பள்ளிகள் தொடங்கப்பட்டது. 1967ல் அண்ணாவின் அரசியல் புரட்சி பல்வேறு மாற்றங்களுக்கு அடித்தளமாக அமைந்தது.

அதன்பின்னர், கலைஞர் கல்லூரிக் கல்வியில் அதிகப்படியான கவனம் செலுத்தினர். அவர் முதல்வராக இருந்த காலகட்டத்தில் 97 கல்லூரிகளைத் திறந்தார். அந்த வழித்தடத்தில் பெண்களுக்கு பல்வேறு திட்டங்கள திராவிட மாடல் அரசு கொண்டு வருகிறது. கல்லூரி, உயர் கல்வி, ஆராய்ச்சிக் கல்விக்கும் திராவிட மாடல் அரசு முக்கியத்துவம் தருகிறது.

கட்டணமில்லா இலவசப் பயணத் திட்டத்தால் இதுவரை 527 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவி. ரூ.1000 மகளிர் உரிமைத் தொகை என பல திட்டங்களை பெண்களுக்கு திராவிட மாடல் அரசு வழங்குகிறது. இந்த வரிசையில் தான் புதுமைப் பெண் திட்டத்தை கொண்டு வந்துள்ளோம். புதுமைப் பெண் திட்டம் மூலம் மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்படுவதால், கல்லூரிகளில் மாணவிகள் சேர்க்கை விகிதம் கூடுகிறது என்ற புள்ளிவிவரத்தை ஆய்வறிக்கையில் படித்து மகிழ்ந்தேன். திட்டத்தினை உருவாக்கிய நோக்கம் நிறைவேறியதாக பெருமை அடைந்தேன்.

மாணவிகளின் படிப்புக்கு மட்டும் அல்ல, வேறு எந்தத் தடை வந்தாலும் அதை நான் உடைப்பேன். இந்த திட்டமெல்லாம் மாணவிகளுக்கு மட்டும்தானா மாணவர்களுக்கு இல்லையா? என்ற கேள்வி எழுந்தததைத் தொடர்ந்து நிதிச் சிக்கல்களையும் மீறி 'தமிழ் புதல்வன்' திட்டத்தை மாணவர்களுக்காக தொடங்கினோம். உயர் கல்வி திட்டத்துக்கு எந்த நெருக்கடி இருந்தாலும் அதை கண்டு கொள்ளாது நலத்திட்டங்களை செயல்படுத்துவது என்று தமிழ் புதல்வன் திட்டத்தை தொடங்கினோம்.

ஒரு ஆண் கல்லூரிக்குள் நுழைந்தால் அது கல்வி வளர்ச்சி. ஒரு பெண் கல்லூரிக்குள் நுழைந்தால் அது சமூகப் புரட்சி. புதுமைப் பெண் திட்டத்தால் உயர் கல்விக்கு செல்லும் மாணவிகளின் எண்ணிக்கை இன்னும் இன்னும் அதிகரிக்கும். அறிவுத்திறன் கூடும். திறமைசாலிகள் உருவார்கள். அதன் காரணமாக தமிழகத்தில் தொழில் தொடங்க ஏராளமான வெளிநாட்டவர் இங்கே வருவார்கள். பாலின சமத்துவம் கூடும். குழந்தை திருமணம் குறையும். உயர் கல்வி கற்காத பெண்களே தமிழகத்தில் இல்லை என்ற நிலையை உருவாக்கும் வரை ஓய மாட்டேன். புதுமைப் பெண்களே படிங்க, படிங்க, படிங்க. படிப்பில் மட்டும் கவனம் செலுத்துங்கள். உங்களுக்குத் தேவையான அனைத்தையும் செய்துதர நான் இருக்கிறேன். அரசு இருக்கிறது. இது போட்டி நிறைந்த உலகம். அதனால் ஒரு பட்டத்தோடு நிறுத்தாமல், மேற்கொண்டு படிங்கள். திருமணத்துக்குப் பின்னரும் வேலைக்குச் செல்லுங்கள். இன்று ரூ.1000 உதவி பெறும் நீங்கள், நாளை பலருக்கும் உதவி செய்ய வேண்டும். வழிகாட்ட வேண்டும். புதுமைப் பெண் திட்டத்தால் நான் இந்த உயரத்தை அடைந்தேன் என்று பின்னாளில் நீங்கள் யாரேனும் என்னிடம் சொன்னீர்கள் என்றால் அதுவே எனக்கான வெற்றி. இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கீதா ஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். திமுக எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.,க்களும் கலந்து கொண்டனர்.

## பெண்ணுக்கு குறைந்தபட்ச பாதுகாப்பை உறுதி செய்யாத "திராவிட பேரிடர் மாடல்" அண்ணாமலை சாடல்

சென்னை, டிச.31

"ஒரு பெண் கல்லூரிக்குள் நுழைந்தால் அந்தப் பெண்ணுக்குக் கொடுக்கப்பட வேண் டிய குறைந்தபட்ச பாதுகாப்பை கூட உறுதி செய்ய முடியாத ஒரு அவல ஆட்சி தான் இந்த திராவிட Disaster Model," என்று பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார்.



இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளப்பக்கத்தில், "ஒரு பெண் கல்லூரிக்குள் நுழைந்தால் அது சமூக புரட்சி என்று நிகழ்ச்சி ஒன்றில் இன்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியுள்ளார். கல்லூரிக்குள் நுழைந்து அங்கு பயிலும் மாணவியை பாலியல் வன்கொடுமை செய்தவனை உங்கள் கட்சியில் இருந்து இன்று வரை நீக்காமல் ஒரு ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் போது, மேடையில் எப்படி இப்படி பேசுகிறீர்கள் முதல்வர் அவர்களே?

ஒரு பெண் கல்லூரிக்குள் நுழைந்தால் அது சமூக புரட்சி, அந்த பெண்ணுக்குக் கொடுக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச பாதுகாப்பை கூட உறுதி செய்ய முடியாத ஒரு அவல ஆட்சி தான் இந்த திராவிட Disaster Model" என்று அவர் கூறியுள்ளார்.

முன்னதாக இன்று காலை அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்று உயர் கல்வியில் சேரும் மாணவிகளுக்கு ரூ.1,000 வழங்கும் புதுமைப் பெண் திட்ட விரிவாக்கத்தை முதல்வர் ஸ்டாலின் இன்று (திங்கள் கிழமை) தொடங்கி வைத்தார். தூத்துக்குடியில் நடந்த இந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், "ஒரு ஆண் கல்லூரிக்குள் நுழைந்தால் அது கல்வி வளர்ச்சி. ஒரு பெண் கல்லூரிக்குள் நுழைந்தால் அது சமூகப் புரட்சி. புதுமைப் பெண் திட்டத்தால் உயர் கல்விக்கு செல்லும் மாணவிகளின் எண்ணிக்கை இன்னும் இன்னும் அதிகரிக்கும். அறிவுத்திறன் கூடும். திறமைசாலிகள் உருவார்கள். அதன் காரணமாக தமிழகத்தில் தொழில் தொடங்க ஏராளமான வெளிநாட்டவர் இங்கே வருவார்கள். பாலின சமத்துவம் கூடும். குழந்தை திருமணம் குறையும். உயர் கல்வி கற்காத பெண்களே தமிழகத்தில் இல்லை என்ற நிலையை உருவாக்கும் வரை ஓய மாட்டேன். புதுமைப் பெண்களே படிங்க, படிங்க, படிங்க. படிப்பில் மட்டும் கவனம் செலுத்துங்கள். உங்களுக்குத் தேவையான அனைத்தையும் செய்துதர நான் இருக்கிறேன். அரசு இருக்கிறது." எனக் கூறியிருந்தார். இதற்குத்தான் அண்ணாமலை எதிரிவினையாற்றியுள்ளார்.

## அரசு பள்ளிகளில் இணைய வசதிக்கான சேவை கட்டணம் பள்ளி கல்வி துறை ரூ.3.26 கோடி நிதி விடுவிப்பு

சென்னை, டிச.31

அரசுப் பள்ளிகளில் இணையதள வசதிக்கான சேவைக் கட்டணத்தை செலுத்தும் வகையில் ரூ.3.26 கோடி நிதியை பள்ளிக்கல்வித் துறை விடுவித்துள்ளது. தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் பயன்பாட்டில் உள்ள பிராட்பேண்ட் சேவைக் கட்டணத்தில் பிஎஸ்என்எல் நிறுவனத்துக்கு ரூ.1.50 கோடி நிலுவை வரை நிலுவை வைக்கப் பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி சர்ச்சையாகின.



இந்நிலையில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் மாநிலத் திட்ட இயக்குநரகம் சார்பில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை விவரம்: தமிழகத்தில் 2,973 உயர்நிலைப் பள்ளிகளுக்கு மாதம் ரூ.1,500 வீதம் கடந்த ஆகஸ்ட் மாதத்துக்கு ரூ.44 லட்சத்து 59,500ம், 3,074 மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களுக்கு ரூ.92,022ம் என மொத்தம் ரூ.1 கோடியே 36 லட்சத்து 81,500 நிதி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகங்களுக்கு வழங்கப் பட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து இணையதள வசதியுள்ள 6,224 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு செப்டம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையான சேவைக் கட்டணத்தை செலுத்தும் வகையில் ரூ.3.26 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியை உடனே இணையதள சேவை நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டும்.

அதற்கான விவரங்களை பள்ளி தலைமை ஆசிரியர்கள் உடனடியாக எமிஸ் வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதற் கிடையே மத்திய அரசின் நிதியுதவியின் கீழ் இந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால், மத்திய அரசு மானியத்தை நிறுத்தி வைத்துள்ளதால் மாநில அரசு தன் சொந்த நிதியில் இருந்து செலவிட்டு வருவதாகவும் துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர்.

## தென் மாநில அளவிலான மின் ஒளி ஐவர் ஹாக்கி போட்டி



தேனி.டிச 31

தேனி மாவட்டம் போடி சிட்னி மைதானத்தில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு தேனி திமுக வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பாக தேனி திமுக வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆசிப்கான் தலைமையில் போடி வெஸ்ட் மவுண்டன் ஸ்போர்ட்ஸ் கிளப் இணைந்து நடத்திய தென் மாநில அளவிலான மின் ஒளி ஐவர் ஹாக்கி போட்டிகள் வெகு விமர்சையாக நடைபெற்றது. மொத்தம் 40 அணிகள் பங்கு பெற்ற இந்த போட்டியில் போடி வெஸ்ட் மவுண்டன் அணியும் தேனி வின்சென்ட் அணியும் இறுதிப் போட்டியில் மோதினர்.

இதில் போடி வெஸ்ட் மவுண்டன்அணி முதல் இடத்தையும் ,தேனி வின்சென்ட் அணி இரண்டாம் இடத்தையும் பிடித் தனர்.வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசளிப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் போடி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் போடி மேற்கு ஒன்றிய செயலாளர் எஸ். லட்சுமணன் மற்றும் போடி திமுக கழக செயலாளர் . புருசோத்தமன் , போடி வெஸ்ட் மவுண்டன் ஹாக்கி கிளப் தலைவர் சிவகுருநாதன் மற்றும் நிர்வாகிகள் அறிவு ,மலைச்சாமி, பாண்டி செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு கோப்பைகளும் பாராட்டு சான்றிதழ்களும் மற்றும் பரிசு தொகையும் திமுக தேனி வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பாக வழங் கப்பட்டது.

## விஜயகாந்த் நினைவு நாளை முன்னிட்டு தாம்பரம் மாநகர மத்திய பகுதி சார்பில் அமைதி பேரணி

தாம்பரம் டிச.31



விஜயகாந்த் நினைவு நாளை முன்னிட்டு தாம்பரம் மாநகர மத்திய பகுதி சார்பில் அமைதி பேரணி நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர மத்திய பகுதி சார்பில் விஜயகாந்த் நினைவு நாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் அனகை முருகேசன் அவர்களின் ஆணைக் கிணங்க தேமுதிக மத்திய பகுதி செயலாளர் என்.ஆர்.ஆனந்த் அவர்கள் ஏற்பாட்டில் நடை பெற்றது இதன் சிறப்பு அழைப் பாளராக தேன்மொழி ஆனந்த, மேற்கு பகுதி செயலாளர் மார்க்கெட் ஞானப்பால், பெருங் களத்தூர் பகுதி கழகச் செயலாளர் அருள், அதிமுக மத்திய பகுதி செயலாளர் எல்லா செழியன், மெடிக்கல் வெங்கடேசன், ரமேஷ், பாஸ்கர், பாபு, சங்கர், சுகுமார், சம்பத் மற்றும் அதிமுக நிர்வாகிகள் மத்திய பகுதி நிர்வாகிகள் சக்திவேல், வள்ளி, அருணகிரி, என்.ஆர். பாலாஜி, கணேசன், ஜெய் ஸ்ரீ, சாந்தி, ரவி, கார்த்திக், ஜானகி, தினேஷ் ஆகியோர் தாம்பரம் பேருந்துநிலையத்தில் எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின்னர் விஜயகாந்த் திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்தி மெழுகுவர்த்தி ஏந்திய வாறு அமைதி பேரணியாக முத்துரங்க தெரு மற்றும் காந்தி ரோடு ஏழாவது தெரு வரை சுமார் இரண்டு கிலோமீட்டர் அளவில் அமைதி பேரணியாக சென்றனர் பின்னர் காந்தி ரோடு ஏழாவது தெருவில் விஜயகாந்த் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து பின்னர் 100க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கினர் இதில் ஏராளமான மாற்று கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் மத்திய பகுதி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## விபிளார்ஸ் நிறுவனத்தின் சார்பில் 2025ம் ஆண்டிற்கான காலண்டர் வெளியீட்டு விழா

தி.நகர் டிச31





விபிளார்ஸ் நிறுவனத்தின் சார்பில் 2025ம் ஆண்டிற்கான காலண்டர் வெளியீட்டு விழா வெகு விமர்சையாக நடை பெற்றது.

சென்னை தி.நகரில் உள்ள தனியார் மண்டபத்தில் விபிளார்ஸ் நிறுவனத்தின் 2025 ஆண்டிற்கான காலண்டர் வெளியீட்டு விழா நிகழ்ச்சி மிக சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடு களை செய்து இருந்த நிறுவனர் செ.வினோத்சாய் செல்வா, கிரியேட்டிவ் ஹெட் மற்றும் ஸ்டைலிஸ்ட் ஜெயலட்சுமி என்கின்ற ஜலக், போட்டோகிராபர் கார்த்திக் சுப்பிரமணி, ஒப்பனைக் கலைஞர் ஜெயந்தி முன்னிலையில் நடைபெற்றது.

இதில் பணியாற்றிய மாடல்கள் ஐஸ்வர்யா, நித்தின் சங்கர், பவித்ரா, ரோஹன், யாழினி, சஞ்சய், அருணா, நாகராஜ், ஜூலி, வின்சி ஜெரால்ட் மற்றும் சூர்யா ஆகியோரின் பங்களிப்போடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## பெருங்களத்தூர் பீர்க்கன்கரணை வணிகர் சங்கம் சார்பில் 2025 காலண்டர் கடைகளுக்கு நேரில் சென்று வழங்கல்

பெருங்களத்தூர் டிச.30



தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் பெருங்களத்தூர் பீர்க்கன்கரணை வணிகர் சங்கம் சார்பில் 2025 ஆண்டு காலண்டர் ஒவ்வொரு கடைக்கும் நேரில் சென்று நிர்வாகிகள் வழங்கினர்.

செங்கல்பட்டு மாவட்டம் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் பெருங்களத்தூர் பீர்க்கன்கரணை கிளை வெகு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அதன்படி பெருங்களத்தூர் பீர்க்கன்காரணை வியாரிகள் சங்கத்தின் 2025ம் ஆண்டிற்காக காலண்டர் அச்சடிக்கப் பட்டுள்ளது.

புதிய காலண்டரை பெருங்களத்தூர் பீர்க்கன்காரணை பகுதியில் உள்ள ஒவ்வொரு வியாபாரிகளுக்கு நேரடியாக சென்று கடந்த ஒரு வாரமாக வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி பெருங்களத்தூர் பேருந்துநிலையம், காமரஜார் நெடுஞ்சாலை, காந்தி ரோடு, சினிவாச நகர் மெயின்ரோடு ஆகிய பகுதிகளில் உள்ள கடைகளுக்கு வணிகர் சங்கத்தின் தலைவர் பாலமுருகன், செயலாளர் சுப்புராமன் ஆகியோர் தலை மையில் கடைகளுக்கு நேரடி யாக சென்று காலண்டர் வழங் கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் பெருங்களத்தூர் பீர்க்கன்காரணை வியாபாரிகள் சங்கத்தின் பொருளாளர் பார்தீபன், துணை தலைவர் பாலாஜி, சங்க சட்ட ஆலோசகர் வழக்கறிஞர், தினேஷ் ராஜ் ஆகியோர் ஒவ்வொரும் கடைகளுக்கும் நேரடியாக சென்று வணிகர் சங்க கலாண்டரை வணிகர்களுக்கு வழங்கினர்.

சங்க காலண்டரை பெற்று கொண்ட ஒவ்வொருவரும் ஆர்வத்துடன் தங்களது கடைகளில் பழைய காலண்டரை கழற்றி விட்டு புதிய காலண்டரை மாற்றி கொண்டனர்.





விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் அண்ணா பல்கலைக்கழக மாணவி விவகாரம் தொடர்பாக நீதி விசாரணை கோரி ஆர்ப்பாட்டம் என அறிவித்த அதிமுகவினர் கைது நடவடிக்கைக்கு முன்பாக நகரில் முக்கிய பகுதிகளில் அதிமுக தொண்டர்கள் குவிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். குறிப்பாக சிக்னல் பகுதியில் முன்னாள் அமைச்சர் சிவி சண்முகம் தலைமையில் 300க்கும் அதிமுக தொண்டர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் போக்குவரத்து 30 நிமிடம் முற்றிலும் தடைபட்டது. போலீசார் அதிமுகவினரை கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபடும்போது போலீசாருக்கும் அதிமுகவினருக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது அதிமுகவினரை கைது செய்யும் நடவடிக்கையில் போலீசார் தொடர்ந்து ஈடுபட்டனர்.

## தமிழக அரசில் காலியாக உள்ள சுமார் 4 லட்சம் பணியிடங்களை நிரப்ப தமிழ்நாடு அரசு அனைத்து துறை பணியாளர்கள் சங்கம் வலியுறுத்தல்!

வேலூர் டிச.31



வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, புஷ்பம்மாள் திருஞான சம்பந்தம் திருமண மண்டபத்தில் மாநில பொதுக்குழு கூட்டம், தமிழ்நாடு அரசு அனைத்துறை பணியாளர்கள் சங்க மாநில பொதுக்குழு கூட்டம் வேலூர் சத்துவாச்சாரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகிலுள்ள திருமண மண்டபத்தில் மாநில தலைவர் டாக்டர் பி. பாஸ்கர் தலைமையில் நடந்தது.

மாநில கௌரவ தலைவர் சி. ராஜவேலு, மாநில பொதுச் செயலாளர் பி. பாலாஜி சிங் மற்றும் சட்ட ஆலோசகர் ஜி. பிரபாகர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாவட்ட தலைவர் டி .கே. ரமேஷ் வரவேற்றார். கூட்டத்தில் மாநில கவுரவ தலைவர் சி. ராஜவேலு தலைமை உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது: தமிழக அரசிடம் தமிழ்நாடு அரசு அனைத்து துறை பணியாளர் சங்க மாநில தலைவர் தலைமையில் சென்னை சென்று முதல்வரின் சிறப்பு செயலர் மற்றும் பல்வேறு துறை செயலர்கள் மற்றும் இயக்குனர் அலுவலகம் ஆகிய இடங்களுக்கு சென்று பேச்சு வார்த்தை நடத்திய விவரங்களை விரிவாக எடுத்துரைத்தார். இந்த மாநில பொதுக்குழுவில் தமிழ்நாடு அரசு அனைத்து துறை பணியாளர் சங்கத்தின் மாநில துணை செயலாளர், மாநில பொருளாளர் எஸ். ரவிக்குமார், மாநில கௌரவ தலைவர் பி.ஜோதிராமலிங்கம், மாவட்ட செயலாளர் நந்தகுமார், மாவட்ட பொருளாளர் எ. மணி, மாவட்ட துணைச் செயலாளர் முத்துசாமி, முனுசாமி, மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட கௌரவ தலைவர்கள் ஆர். சம்பத், தாண்டவமூர்த்தி, மாவட்ட அமைப்பு செயலாளர் மதன்குமார் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். இதைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு தோட்டக்கலை பண்ணை பணியாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் அறிவழகன், சிவகங்கை மாவட்டம் சின்னத்தம்பி, தென்காசி மாவட்டம் சங்கர், தஞ்சாவூர் மாவட்டம் செந்தில், புதுக்கோட்டை மாவட்டம் சோலையப்பன், நீலகிரி மாவட்டம் செல்வம், கரூர் மாவட்டம் மூக்கன், கிருஷ்ணகிரி மாவட்டம் பெருமாள், காஞ்சனா, கடலூர் மாவட்டம் ரங்கநாதன், செங்கல்பட்டு மாவட்டம் அருள்தாஸ், நாமக்கல் மாவட்டம் கொல்லி மலை ரத்தினம், சேலம் மாவட்டம் மாதேஸ்வரி, தீர்த்தம் மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் அனைத்து இணைப்பு சங்க நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் தமிழக அரசு பணியாளர்களுக்கு முன்பு போலவே வருங்கால வைப்பு நிதி பிடித்தம் செய்ய தமிழக அரசை இந்த பொதுக்குழு வேண்டுகிறது. தமிழ்நாடு அரசு பணியாளர்களுக்கு முன்பு போல பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த இந்த பொதுக்குழு வேண்டுகிறது. நிலுவையில் உள்ள சரண்டர் விடுப்பு மற்றும் அகவிலைப்படி ஆகியவற்றை உடனடியாக வழங்க வேண்டும். தமிழக அரசு இனிவரும் காலங்களில் மத்திய அரசு அறிவிக்கும் அதே தேதியில் மாநில அரசும் அகவிலைப்படி மாநில தலைவர் மாநில பொதுச்செயலாளருக்கு இந்த பொதுக்குழு அங்கீகாரம் அளிக்கிறது. தமிழக அரசால் தற்போது வெளியிடப்பட்ட அரசாணை எண் 139 நாள் 3. 10. 2022 இன் படி தமிழக முழுவதும்ண உள்ள பேரூராட்சிகளில் இனி அனைத்து காலிப் பணியிடங்களையும் மற்றும் இனி ஏற்பட போகின்ற காலி பணியிடங்களையும் அவுட்சோர்சிங் முறையில் டெண்டர் விட்டு தற்காலிக முறையில் பணி அமர்த்தும் படி வந்த அரசாணையை திரும்பப் பெற இந்த பொதுக்குழு வலியுறுத்துகிறது .

தமிழ்நாடு அரசு தோட்டக் கலைப் பண்ணைகளில் பணி நிரந்தரம் செய்யப் பட்ட பணியாளர்களுக்கு ஓய்வூதியம், பணிக்கொடை, பதவி உயர்வு, குடும்ப நிதி வழங்க இந்த பொதுக்குழு தமிழக அரசை வேண்டுகிறது. தமிழ் நாடு அரசு தோட்டக்கலைப் பண்ணையில் 10 ஆண்டுகள் பணி முடித்த தினக்கூலி பணியாளர்களுக்கு பணி நிறைந்தரம் செய்ய இந்த பொதுக்குழு வலியுறுத்துகிறது. தமிழக அரசில் காலியாக உள்ள சுமார் 4 லட்சம் பணியிடங்களை நிரப்ப தமிழக அரசை இந்த பொதுக் குழு கேட்டுக்கொள்கிறது.

ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் பேரூராட்சிகளில் பணிபுரியும் தினக்கூலி பணியாளர்களுக்கு தினக்கூலி ரூ. 600 ஆக உயர்த்தி வழங்க வேண்டும். ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் அரசு தோட்டக்கலை பண்ணைகளில் பணிபுரியும் தினக்கூலி பணியாளர்களுக்கு தினக்கூலியாக மாவட்டங்களை ஒருவரை பார்க்க வேண்டிய நிலை உள்ளது எனவே தனித்தனியாக மாவட்ட அதிகாரிகள் நியமிக் கப்பட வேண்டும்.ஈ

வேலூர் போன்ற மாநகராட்சிகளில் மாநகராட்சியாக மாற்றப்பட்டாலும் அரசு பணியாளர்களுக்கு அதற்கு ஈடான வீட்டுவாடகை படி மற்றும் சி சி ஏ வழங்க பரிந்துரைக்கும் படி இந்த பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

## வேலூர் ஸ்ரீபுரம் சக்தி அம்மாவின் 49ம் ஜெயந்தி விழா முன்னிட்டு ரத்ததான முகாமில் ரத்தம் வழங்கிய சமூக அலுவலருக்கு பாராட்டு

வேலூர் டிச31





வேலூர் மாவட்டம், வேலூர், திருமலைக்கோடி, ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடம் ஸ்ரீ சக்தி அம்மாவின் 49ம் ஜெயந்தி விழா முன்னிட்டு ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி மருத்துவமனை மற்றும் மருத்துவ ஆராய்ச்சி மையம், ஸ்ரீபுரம் நாராயணி பீடம் மற்றும் நாராயணி பக்தசபா சார்பில் இரத்ததான முகாம் நாராயணி மருத்துவமனை இயக்குனர் பாலாஜி தலைமையில், மக்கள் பிரதிநிதிகளுடன் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து இரத்த தான விழா நடைபெற்றது.

இம்முகாமில் மக்கள் கருத்து நாளிதழ் மாவட்ட செய்தியாளரும், தென்னிந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் மாவட்டத் தலைவரும், பாரதத் தூண்கள் செய்தி உதவி ஆசிரியரும், சமூக ஆர்வலருமான டாக்டர். ராஜ் பாபு, ஸ்ரீ சக்தி அம்மாவின் ஜெயந்திவிழா முன்னிட்டு இரத்த தானம் வழங்கினார். இந்நிகழ்வின் போது ஸ்ரீ நாராயணி பீடம் அறங்காவலர் சௌந்தர்ராஜன், சுரேஷ், ஸ்ரீ நாராயணி பீடம் குழுமம் அலுவலக பிஆர்ஓ சம்பத், ரத்த வங்கி துறை மேலாளர் ரமேஷ், மருத்துவர்கள் செவிலியர்கள், நாராயணி பக்தசபா குழுவினர் மற்றும் தன்னார்வலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

## தேமுதிக தலைவர் விஜயகாந்தின் நினைவு தினத்தை முன்னிட்டு முடிகாணிக்கை செய்து- அன்னதானம் வழங்கல்

கள்ளக்குறிச்சி டிச31




கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் அருகே உள்ள காட்டு எடையார் கிராம தேமுதிக நிர்வாகிகள் மறைந்த தேமுதிக தலைவர் விஜயகாந்த் முதலாம் ஆண்டு நினைவு தின அமைதிப் பேரணிக்காக நேற்று சென்னை சென்று திரும்பிய நிலையில் 28.12.24. அவர்களது சொந்த ஊரான காட்டு எடையாரில் அக்கட்சி நிர்வாகிகள் சங்கர், சுப்பிரமணி, அய்யனார் ஆகிய மூன்று பேர் முடிகாணிக்கை செலுத்தி மொட்டை அடித்து விஜயகாந்த் அவர்களின் திருவுருவ புகைப்படத்திற்கு, மாலை அணிவித்து, ஊதுபத்தி மற்றும் கற்பூரம் ஏற்றி, மலர் தூவி மரியாதை செலுத்திய பின் ஏழை எளிய பொதுமக்கள் 1,000 பேருக்கு அன்னதானம் வழங்கினர்.

இதுவரை தங்கள் தலைவரின் பிறந்தநாளுக்கு மட்டுமே அவரின் தாரக மந்திரமான இயன்றதை செய்வோம் இல்லாதவர்க்கு என்ற கொள்கை அடிப்படையில் வறுமை ஒழிப்பு தினமாக கொண்டாடி வந்த நிலையில் தற்போது அவரது மறைவுக்கு பிறகு முதல் முறையாக பசித்தோருக்கு உணவளிப்போம் என்ற கொள்கையின் அடிப்படையில் அன்னதானம் வழங்கி வழங்கினோம், இனி வரும் காலங்களில் தங்களின் மனம் கவர்ந்த தலைவரை கடவுளாக பாவித்து அவரது பிறந்தநாள் மற்றும் நினைவு தினங்களில் ஏழை எளிய பொதுமக்களுக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகளை தொடர்ந்து வழங்கி வருவோம் எனவும் கண்ணீர் மல்க கூறினர்,

இந்த நிகழ்வில் தேமுதிக ஒன்றிய செயலாளர் அருள், தேமுதிக நிர்வாகிகள். ராஜா, சம்பத்குமார், சலீம், சுபாஷ், ஏழுமலை, வள்ளிகந்தன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்,மேலும் தங்களது தலைவரின் நினைவு நாளில் மொட்டை அடித்து முடி காணிக்கை செலுத்திய நிகழ்வானது பொதுமக்கள் மத்தியில் பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

## கள்ளக்குறிச்சி வட்டம் நீலமங்கலம் ஊராட்சியில் மழைக்காலங்களில் வீடுகளில் தண்ணீர் புகுவதாக ஆட்சியரிடம் மனு



கள்ளக்குறிச்சி டிச31

கள்ளக்குறிச்சி மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் நீலமங்கலம் ஊராட்சியில் வசித்து வரும் வரதராஜ் என்பவர் திருமணம் செய்து 12 ஆண்டுகளுக்கு மேலா கிறது. தனக்கு மூன்று பிள்ளைகள் உள்ளன. தான் வசித்து வரும் வீட்டில் மழை பொழியும் போது வீடு முழுக்க ஒழுகின்றது. இதனால் பிள்ளைகள் படிப்பதற்கு கடும் சிரமத்திற்கு ஆளாகி பிள்ளைகளின் வாழ்வாதாரம் பாதிக்கப் படுகிறது. இரவு நேரங்களில் தூங்க முடியாமலும் தவித்து வருகின் றனர்

இது குறித்து நீலமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களிடமும், ஊராட்சிச் செயலாளர் அவர்களிடமும் மனு கொடுத்தும், நேரில் சொல்லியும் இதுவரை வீடு வழங்கவில்லை.

இதனால் கடும் சிரமத்திற்கு ஆளாகின்றனர் . அதனால் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் கலைஞரின் கனவு இல்லத் திட்டம் திட்டத்திலோ அல்லது (PMAY) பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் திட்டத்திலோ வீடு வழங்கி தங்கள் பிள்ளைகளின் படிப்பு வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வகையில் இருக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் இடம் மனு கொடுக்கப்பட்டது.

## ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் தமிழ்மாநில வருவாய்த் துறை அலுவலர் சங்க பொதுக்குழு கூட்டம்




வேலூர் டிச31

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் ஆபீஸர்ஸ் லைன், ஏலகிரி அரங்கில், வேலூர், இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகிய வேலூர் ஒருங்கிணைந்த மாவட்டத்தில் தமிழ்மாநில வருவாய்த் துறை அலுவலர்கள் சங்கம் சார்பில் பொதுக்குழு கூட்டம் மாநில பொதுச் செயலாளர் வி.சுந்தர்ராஜன் தலைமையிலும், மாவட்ட செயலாளர் எம்.நந்தகுமார், மாவட்ட பொருளாளர் கே.யுவராஜ், மத்திய செயற்குழு உறுப்பினர் எஸ்.ராமலிங்கம், இராணிப்பேட்டை மாவட்ட செயலாளர் தினகரன், இரா. மத்திய செயற்குழு உறுப்பினர் ரமேஷ்குமார், திருப்பத்தூர் மாவட்ட தலைவர் ஆர்.அன்பழகன், மாவட்ட செயலாளர் யோகானந்த பூபதி, மாவட்ட பொருளாளரும், மகளிர் அணி மாநிலத் துணைச் செயலாளர் கௌரி, மத்திய செயற்குழு உறுப்பினர் ராஜேந்திர பிரசாத், ஒருங்கிணைந்த மாவட்ட இளைஞரணி மாநில செயலாளர் பிரபு ஆகியோர் முன்னிலையிலும், ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட செயலாளர் வே.சுரேஷ் சிறப்பு வரவேற்புரையாற்றுகையில் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிர்வாகிகளுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்து சிறப்பித்தனர்.

மேலும், மாநில செயலாளர் எஸ்.எம்.முகமது சாதிக், சங்கத்தின் வளர்ச்சிக்கும் சங்க உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையிலும் சில தீர்மானங்களை முன்மொழிந்து விழா பேருரையாற்றினர். மாநிலத் தலைவர் பி.கே. சிவகுமார் ஒருங்கிணைந்த மாவட்டத்தில் நிர்வாகிகளை அறிவித்து சிறப்புரையாற்றினர். சட்ட ஆலோசகர் கோ. குமரன் டைரி மற்றும் காலண்டரை வெளியிட்டு சிறப்புரையாற்றினார். இதனைத் தொடர்ந்து மாநில பொதுச் செயலாளர் அ.சோனை கருப்பையா, வேலூர் மாவட்ட செயலாளர் தே.முரளிதரன், வேலூர் மாவட்ட பொருளாளர் கு.கனகராஜ், வேலூர் மாவட்ட தலைவர் சே. இராஜேந்திர பிரசன்னா மற்றும் வேலூர், மாநில துணை தலைவர் ஆர்.ரவி ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கி பொதுக்கூட்டத்தை சிறப்பித்து இக் கோட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் டைரி மற்றும் காலண்டர்களை வழங்கி வாழ்த்து தெரிவித்தனர். இறுதியில் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட பொருளாளர் எம்.விஜயபாஸ்கர் நன்றயுரை யாற்றி பொதுக்குழு கூட்டம் நிறைவுபெற்றது.

## திருச்சி மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில் குளோபல் குழந்தைகளுக்கு சீருடை வழங்கல்





திருச்சி டிச.31

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் தாலுக்கா அண்ணா வளைவு முருகன் கோயில் தெருவில் மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சில உணவுப் பொருள்கள் மற்றும் குழந்தைகளுக்கு சீருடைகள் வழங்கியுள்ளோம் இதில் நிறுவன பொதுச் செயலாளர் ஆதிலெட்சுமி ஆனந்தராஜ் மாநில ஆலோசகர் ராமன் துணை ஆலோசகர் பெஞ்சமின் வழக்கறிஞர் சாருமதி மாநில மகளிர் அணி தலைவர் சுபா மாநில மகளிர் அணி துணை தலைவர் ஜெயராணி மாநில மகளிர் அணி செயலாளர் பானுமதி மாநில ஒருங்கிணைப்பாளர் வடிவேலு மாநில இளைஞரணி ஒருங்கிணைப்பாளர் ஜான் திருச்சி மாவட்ட தலைவர் ராஜ்குமார் திருச்சி மாவட்டம் மகளிர் அணி தலைவர் கவிதா திருச்சி மாவட்ட துணைத் தலைவர் சந்திரா திருச்சி மாவட்ட மகளிர் அணி துணைத் தலைவர் காந்திமதி திருச்சி மாவட்ட மகளிர் அணி செயலாளர் ரேவதி திருச்சி மாவட்ட மகளிர் அணி துணைசெயலாளர் யாஸ்மின் மகளிர் அணி ஒருங்கிணைப்பாளர் பழனியம்மாள் மற்றும் மல்லீஸ்வரி அன்பிலா அஜித் சஞ்சய் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

## விஜயகாந்த் நினைவு நாளை முன்னிட்டு 50வது வட்ட தேமுதிக சார்பில் மாபெரும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி



தாம்பரம் டிச31

தேமுதிக தலைவர் விஜயகாந் முதலாம் ஆண்டு குரு பூஜையை முன்னிட்டு செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர மத்திய பகுதி 50வது வட்டக் கழக சார்பில் மாபெரும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி 50வது வட்டக் கழக செயலாளர் பாலமுருகன், மத்திய பகுதி அவைதலைவர் பாலாஜி ஏற்பாட்டில் வட்ட தலைவர் வாசிம் ராஜா, பொருளாளர் ராஜா, துணை செயலாளர்கள் முகமது அலியார், தினேஷ், வட்ட இளஞ்செழியன், இளைஞரணி செயலா ளர்கள் ரமேஷ், யுவராஜ், சுல்தான், இதயதுல்லா, கோபி, மாணவரணி செயலாளர் பிரதாப், செயற்குழு உறுப்பினர் ராஜா, மொய்தின், சிக்கந்தர் பத்மநாபன் முன்னிலையில் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மாவட்ட துணைச் செயலாளர் மா.செழியன், முன்னாள் நகர பொருளாளர் கணேசன், மேற்கு பகுதி செயலாளர் மார்க்கெட் ஞானப்பால், மத்திய பகுதி அவை தலைவர் பாலாஜி, மத்திய பகுதி துணைச் செயலாளர் சதீஷ்குமார், மேற்கு பகுதி பொருளாளர் ஜார்ஜ், கவின்குமார் ஆகியோர் கலந்துகொண்டு விஜயகாந்த் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பின்னர் மாபெரும் அன்னதானத்தை சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு வழங்கினார்கள் இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## தேனி மாவட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்த மாணவியருக்கு மாதம் ரூ.1000 வழங்கிடும் பற்று அட்டைகளை வழங்கல்





தேனி டிச31

தேனி மாவட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், உயர்கல்வி பயிலும் மாணவியருக்கு மாதம் ரூ.1000 / வழங்கிடும் புதுமைப்பெண் திட்டத்தை அரசு உதவி பெறும் பள்ளிகளில் விரிவாக்கம் செய்யும் பொருட்டு, நேற்று (30.12.2024) தூத்துக்குடி மாவட்டம், காமராஜ் கல்லூரியில், புதுமைப்பெண் திட்டம் விரிவாக்கத்தைத் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, தேனி மாவட்ட ஆட்சியர் அலுவ லக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் ஆர்.வி.ஷஜீவனா, புதுமைப் பெண் திட்டம் விரிவாக்கத்தின் கீழ், அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவியர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000/ ஊக்கத் தொகை பெறுவதற்கான வங்கி பற்று அட்டைகளை சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.மகாராஜன் (ஆண்டிபட்டி) கே.எஸ்.சரவணக்குமார் (பெரியகுளம்) ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் பேசியதாவது,

தேனி மாவட்டத்தில் புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் மொத்தமாக 10, 382 மாணவ, மாணவியர்கள் பயன்பெற்றுள்ளனர். தற்பொழுது புதுமைப்பெண் திட்டம் விரிவாக்கத்தில் மட்டும் 2371 மாணவியர்கள் பயனடைவார்கள்.

எனவே, மாணவியர்கள் இத்திட்டத்தினை பயன்படுத்தி உயர் கல்வி படிப்பினை சிறப்பான முறையில் மேற்கொண்டு தேர்ச்சியடைவதோடு, பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிடும் வகையிலும் தங்கள் திறன்களை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, புதுமைப்பெண் திட்டம் விரிவாக்கத்தின்கீழ், அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவியர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000/ ஊக்கத் தொகை பெறுவதற்கான வங்கி பற்று அட்டைகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

இந்நிகழ்வில் பயன்பெற்ற மாணவிகள் தெரிவித்ததாவது,

என் பெயர் ஸ்ருதி. எனது தந்தை பெயர் குமரேசன், கொத்தனார் வேலை செய்து வருகிறார். தற்பொழுது ஆண்டிபட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இளங்கலை பொருளாதார பிரிவில் மூன்றாம் ஆண்டு பயின்று வருகின்றேன். நான் எனது பள்ளிப் படிப்பை அரசு உதவி பெறும் பள்ளியில் பயின்றதால் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் என்னால் உதவித்தொகை பெற

இயலவில்லை. குடும்ப சூழ்நிலை காரணமாக நான் படித்துக் கொண்டே பகுதி நேர வேலை செய்து வந்தேன். தற்பொழுது புதுமைப்பெண் திட்டம் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்ற மாணவிகளுக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளதை முன்னிட்டு என்னுடைய வங்கி கணக்கில் நேற்றைய தினமே ரூ.1000/ வரவு வைக்கப்பட்டுள்ளது. இதனால் நான் என்னுடைய பகுதி நேர வேலையை விட்டுவிட்டு முழுவதுமாக படிப்பில் மட்டும் கவனம் செலுத்த உள்ளேன். என்னைபோன்ற வறுமையில் உள்ள மாணவிகள் தொடர்ந்து உயர்கல்வி பயில்வதற்கு இத்தகைய நல்வாய்ப்பினை ஏற்படுத்தி தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சியருக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

என் பெயர் தேவதர்ஷினி. என் தந்தை பெயர் மணிகண்டன், பேருந்து நடத்துநராக வேலை செய்து வருகிறார். நான் அரசு சட்டக்கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பயின்று வருகின்றேன். முதன்முதலாக புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் நானும் மாதம் ரூ.1000 / பெற உள்ளேன். இது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. இதன்மூலம் நான் எனது பெற்றோரின் உதவியின்றி எனக்கு தேவையான புத்தகங்களை வாங்கிக் கொள்ளவும், எனது சிறு தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்ள முடியும். இத்தகைய நல்வாய்ப்பினை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியருக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நிகழ்வில் மாவட்ட சமூக நல அலுவலர் சியாமளா தேவி, அரசு தொழிற்நுட்ப கல்லூரி முதல்வர் சேகரன், ஆண்டிபட்டி கலை அறிவியில் கல்லூரி முதல்வர் முனைவர் சுஜாதா மற்றும் பேராசியர்கள், மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கன்னியாகுமரியில் மாதந்தோறும் மாணவிகளுக்கு ஆயிரம் ரூபாய் திட்ட விரிவாக்கத்தில் புதிய மாணவிகளுக்கு பற்று அட்டைகள் வழங்கல்




கன்னியாகுமரி டிச31

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந் தோறும் ரூ.1000 உதவித் தொகை வழங்கும் “புதுமைப் பெண் திட்டம்” விரிவாக்கத்தினை தொடங்கி வைத்ததைத்தொடர்ந்து நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நன்றி தெரிவித்தார்கள்

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று டிச 30 சமூகநலத்துறை சார்பில் தூத்துக்குடி, காமராஜ் கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்புவரை அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித்தொகை வழங்கும் புதுமைப்பெண் விரிவாக்கத் திட்டத்தை தொடங்கிவைத்ததைத் தொடர்ந்து நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, முன்னிலையில் கன்னியாகுமரி மாவட்டம் அஞ்சுகிராமம் ரோகிணி பொறியியல் கல்லூரி கலையரங்கில், மாணவியர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்து தெரிவிக்கையில்

உயர்கல்வி பயிலும் மாணவியர்களுக்காக ஏற்கனவே தமிழ்நாடு அரசால் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வரும் புதுமைப் பெண் திட்டத்தின் விரிவாக்கமாக, அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/ உதவித் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தில் கலை மற்றும் அறிவியல், தொழிற்சார் படிப்புகள், இணை மருத்துவம் சார்ந்த படிப்புகள், பட்டயப் படிப்பு. தொழிற்கல்வி மற்றும் ஒருங்கிணைந்த பட்ட மேற்படிப்பு (முதல் 3 ஆண்டுகளுக்கு மட்டும்) போன்ற உயர் கல்வி படிப்புகள் படிக்கும் மாணவியர்கள் பயன்பெறுவர். தகுதியான அனைத்து புதுமைப் பெண் திட்ட பயனாளிகளுக்கும் உதவித்தொகை கிடைப்பதை அனைத்து கல்லூரி தொடர்பு அலுவலர்களும் உறுதி செய்ய வேண்டும். இத்திட்டத்தினை விரிப்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் பத்மநாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் மனோ தங்கராஜ், மாவட்ட சமூகநல அலுவலர் விஜயமீனா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் செல்வராஜ், நாகர்கோவில் மாநகராட்சி துணை மேயர் மேரி பிரின்சி லதா, மாணவியர்கள், பேராசிரியர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## சென்னை அடையாறில் காஞ்சிபுரம் வரமகாலட்சுமி சில்க்ஸ், புதிய கிளை திறப்பு



சென்னை, டிச 31

காஞ்சிபுரம் வரமகாலட்சுமி சில்க்ஸ், தனது 66 ஆவது கிளையும், சென்னை அடையாறில் பிரத்தியே6ஆவது கிளையை திறந்துள்ளது. இந்த கிளையை புகழ்பெற்ற தருமை ஆதீனம் 27 ஆவது குரு மஹா சன்னிதானம் ஶ்ரீ லஸ்ரீகைலா மாசிலாமணி தேவகி ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் திறந்து வைத்தார். இந்த கடையில் பனாரசி, படோலா, கோட்டா, காஞ்சிபுரம், பைத்தானி, ஆர்கன்சா மற்றும் குப்பதம் போன்ற பல்வேறு வகையான புடவைகள் உள்ளிட்ட பிரீமியம் தயாரிப்புகள் உள்ளன.

சாய் சில்க்ஸ் (கலாமந்திர்) லிமிடெட் (சாய் சில்க்ஸ் அல்லது எஸ்எஸ்கேஎல்) என்பது, 2019, 2020 மற்றும் 2021 நிதியாண்டில் (டெக்னோபாக் அறிக்கையின்படி) வருமானம் மற்றும் வரிக்கு பிந்தைய லாபத்தின் அடிப்படையில் தென்னிந்தியாவில் எத்னிக் ஆடைகளின், குறிப்பாக சேலைகளின் முன்னணி சில்லறை விற்பனை நிறுவனங்களில் ஒன்றாகும். இந்த புதிய எஸ்எஸ்கேஎல் ஃபார்மேட் ஸ்டோர் எங்கள் முழு அளவிலான பிரீமியம் பட்டுப் புடவைகள் மற்றும் காஞ்சிபுரம் புடவைகளை வழங்குகிறது. மூலோபாய ரீதியாக ஒரு பிரதான பகுதியில் அமைந்துள்ள புதிய ஸ்டோர், எங்கள் கிளஸ்டர் அடிப்படையிலான அணுகுமுறையின் ஒரு பகுதியாகும்.

சாய் சில்க்ஸ் கலாமந்திர் லிமிடெட் நிர்வாக இயக்குநர் பிரசாத் சலாவடி கூறுகையில், “எங்கள் வரமகாலட்சுமி ஸ்டோர்கள் தனித்துவமான அனுபவத்தையும் வாடிக்கையாளர் சேவையையும் வழங்குவதாக நாங்கள் நம்புகிறோம். இது எங்கள் சேலைகள், பல்வேறு இருப்பு வைப்பு யூனிட்டுகளுடன் இணைந்து, வளர்ந்து வரும் வாடிக்கையாளர் தளத்தை ஈர்க்கவும் தக்கவைக்கவும் உதவுகிறது. இங்கிருந்து, தென்னிந்தியா முழுவதும் 25 கூடுதல் ஸ்டோர்களை திறக்க உத்தேசித்துள்ளோம். இவை அடுத்த இரண்டு நிதியாண்டுகளில் திட்டமிடப்பட்டுள்ளன’ என்றார்.

வரமகாலட்சுமி ரீடெய்ல் பிராண்ட் வடிவம் 2011 ஆம் ஆண்டு பெங்களூரு சிக்பெட்டில் முதல் கடை திறப்புடன் தொடங்கப்பட்டது. பின்னர் பெங்களூரு, ஐதராபாத், சென்னை, விஜயவாடா, நெல்லூர் போன்ற நகரங்களில் தொடங்கப்பட்டது.

வரமகாலட்சுமி ஸ்டோர்கள் மிகவும் பாரம்பரியமாக அலங்கரிக்கப்பட்டுள்ளன. மேலும் காஞ்சிபுரம் கலாச்சாரத்தில் பிராண்டின் வேர்களை பிரதிபலிக்கின்றன. இது கைத்தறி புடவை வியாபாரத்தை புதுப்பித்து, காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள் மற்றும் பிற கைத்தறி மற்றும் நிகழ்வுகளுக்கான புடவைகளை ஒரே கூரையின் கீழ் வழங்குகிறது.

சாய் சில்க்ஸ் என்பது கலாமந்திர், வரமகாலட்சுமி சில்க்ஸ், மந்திர் மற்றும் கேஎல்எம் ஃபேஷன் மால் உள்ளிட்ட நான்கு ஸ்டோர் வடிவங்களை கொண்டுள்ளது. இது சந்தையின் பல்வேறு பிரிவுகளுக்கு தயாரிப்புகளை வழங்குகிறது. இதில் பிரீமியம் எத்னிக் ஃபேஷன், நடுத்தர வருமான பிரிவினருக்கான எத்னிக் பேஷன் மற்றும் மதிப்பு பேஷன் ஆகியவை அடங்கும். வெவ்வேறு விலைகளில் பல்வேறு தயாரிப்புகளுடன் அனைத்து சந்தை பிரிவுகளிலும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு ஆடைகளை வழங்குகிறது.

# ராமநாதபுரத்தில் புதுமைப்பெண் திட்டத்தின் மூன்றாம் கட்ட விரிவாக்க திட்டத்தினை துவக்கி வைத்து மாணவிகளுக்கு பற்று அட்டையினை வழங்கிய அமைச்சர்



ராமநாதபுரம் டிச+31

ராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை முகமது சதக் பொறியியல் கல்லூரியில், 6 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகள் பயன்பெறும் வகையிலான புதுமைப்பெண் திட்டத்தின் மூன்றாம் கட்ட துவக்க விழா நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், தலைமையில், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் ஆகியோர் முன்னிலையில் மாண்புமிகு பால்வளத்துறை மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் மாணவிகளுக்கு பற்று அட்டையினை (டெபிட் கார்டு) வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பால்வளத் துறை மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் கீழக்கரை முகம்மது சதக் பொறியியல் கல்லூரி, கமுதி பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இராமநாதபுரம் அரசு மகளிர் கலைக் கல்லூரி, பரமக்குடி அரசு கலைக் கல்லூரி, இராம நாதபுரம் அரசு சட்டக் கல்லூரி, அச்சுந்தன்வயல் சேதுபதி கலைக் கல்லூரி ஆகிய கல்லூரி மற்றும் இராமநாதபுரம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் புதுமைப்பெண் திட்டம் மூலம் படிக்கும் மாணவிகள் என மொத்தம் 1725 மாணவிகளுக்கு ரூ.1000 க்கான பற்று அட்டையினை (டெபிட் கார்டு) வழங்கி பேசுகையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் வரலாற்று சிறப்புமிக்க திட்டமான புதுமைப்பெண் விரிவாக்க திட்டத்தினை பெண் கல்வியை ஊக்கப்படுத்தும் வகையில் செயல்படுத்தியுள்ளார்கள். அரசு பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையினை அதிகரிக்கும் பொருட்டு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் அரசு பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும், சான்றிதழ் படிப்பு பட்டயப்படிப்பு பட்டப்படிப்பு தொழில் கல்வி ஆகியவற்றில் இடை நிற்றல் இன்றி கல்வி பயின்று படிக்கும் வரை மாதம் ரூ.1000 அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத் தப்படும்என பால்வளத்துறை மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் தேன்மொழி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சின்னராசு மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் கார்த்திக்கேயன் கீழக்கரை நகர் மன்ற தலைவர் செஹானாஸ் ஆபிதா திருப்புல் லாணி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் புல்லாணி முகம்மது சதக் பொறியியல் கல்லூரி முதல்வர் நிர்மல் கண்ணன் கீழக்கரை வட்டாட்சியர் ஜமால் முகம்மது மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மதுரை மாவட்டத்தில் புதுமைப்பெண் திட்டம் விரிவாக்கத்தின் மூலம் 5509 மாணவிகள் கூடுதலாக பயன்பெறுகிறார்கள்! அமைச்சர் பி.மூர்த்தி தகவல்



மதுரை, டிச 31

தமிழ்நாடு முதலமைச்சர் தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற விழாவில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக புதுமைப் பெண் திட்டத்தின் விரிவாக்கத்தை தொடங்கி வைத்தார்கள்.

இதனையடுத்து, மதுரை டோக் பெருமாட்டி கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்பி.மூர்த்தி மதுரை மாவட்டத்தில் விரிவுபடுத் தப்பட்ட புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000/ உதவித்தொகை பெறுவதற்கான வங்கி பற்று அட்டைகளை வழங்கினார்.

இவ்விழாவில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மகளிர் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பெண் கல்வியை ஊக்குவிப்பதற்கும், பெண்கள் பொருளாதார சுதந்திரம் பெற்று உயர்ந்திட வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அந்தவகையில் பெண்களின் உயர்கல்வி ஊக்குவித்திடும் நோக்கில் கடந்த செப்டம்பர் 2022ல் புதுமைப்பெண் திட்டம் என்ற மகத்தான திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையில் அரசுப் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தில் புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் மொத்தம் 92 கல்லூரிகளை சார்ந்த 7, 340 மாணவியர்கள் மாதம் ரூ.1000 பெற்று பயனடைந்து வருகிறார்கள். மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தை அரசுப் பள்ளிகளில் படித்துள்ள மாணவியர்களுக்கு மட்டுமல்லாமல், அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கும் மாதம் ரூ.1000 உதவித்தொகை வழங்கிடும் வகையில் விரிவுப் படுத்தி தொடங்கி வைத்துள்ளார்கள். இதன் மூலம் மதுரை மாவட்டத்தில் 16 பொறியியல் கல்லூரிகள், 44 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 4 மருத் துவக் கல்லூரிகள், 2 தொழிற்பயிற்சி நிலையங்கள், 3 பாலிடெக்னிக் கல்லூரிகள், ஒரு சட்டக் கல்லூரி, ஒரு பல்கலைக்கழகம், 25 பார்மசி கல்லூரி மற்றும் 3 வேளாண்மைக் கல்லூரி உட்பட 98 கல்லூரிகளைச் சேர்ந்த 5509 மாணவிகள் கூடுதலாக பயன்பெற உள்ளார்கள். தமிழ் நாடு முதலமைச்சர் தலைமையிலான இந்த அரசு எப்போதும் பெண்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட அரசாக செயல்பட்டு வருகிறது என வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ. வெங்கடேசன், துணை மேயர் தி.நாகராஜன் மாநகராட்சி மண்டல தலைவர் சரவண புவனேஸ்வரி அவர்கள், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை இணை இயக்குநர் ஜெயலெட்சுமி, கல்லூரி கல்விகள் இணை இயக்குநர் எ.குணசேகரன் மாவட்ட சமூக நல அலுவலர் கி.திலகம், டோக் பெருமாட்டி கல்வி முதல்வர் பியூலா ஜெயஸ்ரீ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# 'திண்டுக்கல் மாவட்டம் பழனியில் புதுமைப்பெண்' திட்டம்



திண்டுக்கல் டிச31

திண்டுக்கல் மாவட்டம் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, பழனி சின்னக்கலையம்புத்தூர் அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரியில் புதுமைப்பெண் திட்ட பயனாளிகளுக்கு பற்று அட்டைகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் (30.12.2024) அன்று மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு உயர் கல்வி உறுதித்திட்டத்தின் கீழ் புதுமைப்பெண் திட்டத்தில் உயர்கல்வி படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டத்தின் விரிவாக்கத்தை தூத்துக்குடியில் இருந்து தமிழகம் முழுவதும் உள்ள மாணவிகள் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தினை தொடங்கி வைத்தார் .

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில் குமார், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை இணை இயக்குநர் கு.கண்மணி ஆகியோர் முன்னிலையில் பழனி சின்னக்கலையம்புத்தூர் அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரியில் புதுமைப்பெண் திட்ட பயனாளிகளுக்கு பற்று அட்டைகளை வழங்கி பேசியதாவது:

புதுமைப்பெண் திட்டத்தினை தொடர்ந்து மாணவர்களின் சேர்க்கை விகிதத்தினை அதிகரிக்கும் பொருட்டு தமிழ்ப் புதல்வன் என்னும் திட்டம் தமிழ் நாடு முதலமைச்சர் .மு.க. ஸ்டாலின் தலைமையில் கோயம் புத்தூர் மாவட்டத்தில் 09.08.2024 அன்று துவக்க விழா நடை பெற்றது. தமிழ்புதல்வன் திட்டத்தில் திண்டுக்கல் மாவட்டத் தில் தற்பொழுது 6921 மாணவர் கள் பயன் பெறுகின்றனர். தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தூத்துக்குடியில் நடைபெறும் விழாவில் புதுமைப்பெண் திட்டத்தின் விரிவாக்கப் பணிகளைத் தொடங்கி வைத்தார்

திண்டுக்கல் மாவட்டத்தில் 10 பொறியியல் கல்லூரிகள், 22 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 1 மருத்துவக்கல் லூரி மற்றும் 10 நர்சிங் கல்லூரிகள், 8 தொழிற்பயிற்சி நிலையங்கள், 10பாலிடெக்னிக் கல்லூரிகள், ஒரு சட்டக்கல்லூரி, ஒரு ஆசிரியர் பயிற்சி நிலையம், ஒரு பல்கலைக்கழகம், 8 பார்மஸி மற்றும் 3 வேளாண்மை கல்லூரிகள் உட்பட 75 கல்லூரிகளில் 3681 மாணவிகள் பயன் பெற தகுதியான நிலையில் உள்ளனர். திண்டுக்கல் மாவட்டத்தில் 9255 மாணவியர்கள், 6921 மாணவர்கள் என மொத்தம் 16,276 பயன்பெற்று வருகிறார்கள்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆட்சிகாலத்தில் மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டன. அரசுப்பள்ளி மாணவ, மாணவிகள் அரசு பேருந்துகளில் இலவச பயணம் திட்டத்தை செயல்படுத்தினார். அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் கல்விக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இந்த திட்டங்களை மாணவ, மாணவிகள் நல்ல முறையில் பயன்படுத்தி தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும், என உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசினார்.

இந்நிகழ்ச்சியில், பழனி சார் ஆட்சியர் எஸ்.கிஷன்குமார், மாவட்ட முன்னோடி வங்கி பொது மேலாளர் அருணாச்சலம், மாவட்ட சமூகநல அலுவலர் கோ.புஷ்பகலா, பழனி, சின்னக் கலையம்புத்தூர் அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் ந.புவனேஸ்வரி, ஒன்றிய பெருந் தலைவர் ஈஸ்வரி, ஒன்றிய செயலாளர் (மேற்கு) சௌந்திர பாண்டியன், நகர்மன்ற துணைத்தலைவர் கந்தசாமி கலந்துகொண்டனர்.

# "புதுமைப் பெண்" விரிவாக்க திட்டத்தின் கீழ், சிவகங்கை மாவட்டத்தில் 2, 681 மாணவியர்களுக்கு மாதம் ரூ.1, 000/ வழங்கி தொடங்கி வைத்த அமைச்சர்




சிவகங்கை, டிச.31

சிவகங்கை மாவட்டம் தமிழ் நாடு முதலமைச்சரால், நேற்று (டிச30) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில், இரண்டாம் கட்டமாக துவக்கி வைக்கப்பட்டுள்ள, "புதுமைப் பெண்" விரிவாக்க திட்டத்தின் கீழ், சிவகங்கை மாவட்டத்தில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று, உயர்கல்வி பயிலும் மாணவியர்களுக்கு மாதம் ரூ.1, 000/ வழங்கும் நிகழ்வினை, கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், புனித மைக்கேல் பொறி யியல் கல்லூரியில், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தலைமையில், மானாமதுரை எம்எல்ஏ ஆ. தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில் தொடங்கி வைத்தார். பின்னர அவர் தெரிவிக்கையில்,

இரண்டாம் கட்டத்தின் விரிவாக்கமாக, அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவியர்களுக்கு மாதம் ரூ.1, 000/ வழங்கும் "புதுமைப் பெண்" விரிவாக்க திட்டத்தினை நேற்று தமிழ்நாடு முதலமைச்சர் தூத்துக்குடி மாவட்டத்தில் தொடங்கி வைத்துள்ளார்கள். அந்நிகழ்ச்சியின் வாயிலாக மாணவிகளுக்கு முத்தான கருத்துக்களையும் தமிழ்நாடு முதலமைச்சர் எடுத்துரைத்துள்ளார்.

கல்வி வளர்ச்சி பெற்ற மாநிலம், அனைத்து வளமும் பெற்ற மாநிலமாக கருதப்படும் என்ற அடிப்படையில், அனைவரும் தரமான கல்வியை பெற வேண்டும் என்ற உயரிய நோக்கில் புதிதாகவும் பல்வேறு திட்டங்களை அறிவித்து, கல்வித் துறையில் புரட்சி ஏற்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் தற்போது கல்வித்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மட்டுமின்றி, புதிதாகவும் தொலைநோக்கு பார்வையுடன் திட்டங்களை செயல்படுத்திடும் பொருட்டும், பெண் கல்வியை ஊக்குவிப்பது மட்டுமன்றி உயர் கல்வியில் பெண்களின் சேர்கையை அதிகரிக்கும் நோக்கத்துடன் அறிமுகப் படுத்தப்பட்ட திட்டமே, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டமாகும்.

இத்திட்டத்தின் கீழ், அரசு பள்ளிகளில் படித்துள்ள மாணவியர்களுக்கு மட்டுமல்லாமல், அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்று, உயர் கல்வியில் சேரும் மாணவியர்க்கும் மாதம் ரூ.1, 000 வழங்கும் வகையில் தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும்இவ்விரிவுபடுத்தப்பட்டுள்ள திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்து, உயர்கல்வியில் சேர்ந்துள்ள 75, 028 மாணவியர்கள் ரூ.1, 000 பெற்று பயனடையவுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் சிவகங்கை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள 49 கல்லூரிகளில் பயின்று வரும் 2, 681 மாணவியர்களுக்கு, அவர்களது வங்கிக் கணக்கில் தலா ரூபாய் 1, 000 வரவு வைக்கப்பட்டு, அப்பணத்தை எடுப்பதற்கான வங்கி அட்டைகள் வழங்கும் நிகழ்வு நேற்று தொடங்கி வைக் கப்பட்டுள்ளது.

முன்னதாக, சிவகங்கை மாவட்டத்தில் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் 57 கல்லூரிகளில் 4, 500 மாணவிகள் பயன்பெற்று வருவதுடன், நேற்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ள இவ்விரிவாக்க திட்டத்தின் வாயிலாக நமது மாவட்டத்தில் மொதம் 7, 181 மாணவிகள் பயன்பெறவுள்ளனர்.

மாணாக்கர்கள், நல்லமுறையில் பயின்று, வீட்டிற்கும் நாட் டிற்கும் பெருமை சேர்த்திட வேண்டும் என கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜய குமார், இணை பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத், மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் உமா மகேஸ்வரி, மாவட்ட சமூக நல அலுவலர் ரதிதேவி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலுமுத்து, புனித மைக்கேல் பொறியியல் கல்லூரி தாளாளர் ஸ்டாலின், காளையார்கோவில் வட்டாட்சியர் முபாரக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை அருகே உள்ள தொண்டியை சேர்ந்த சமூக ஆர்வலரும் தொண்டி மேலப்பள்ளிவாசல் ஜமாத் முத்தவல்லியுமான உயர்நீதிமன்ற வழக்கறிஞர் கலந்தர் ஆசிக் அஹமது SDPI கட்சியின் மாநில தலைவர் நெல்லை முபாரக் முன்னிலையில் SDPI கட்சியில் தன்னை இணைத்து கொண்டார்.

# கத்தோலிக்க திருச்சபையின் உலகத் தலைவர் போப் பிரான்சிஸ் 2025ம் ஆண்டு கிறிஸ்து பிறப்பின் யூபிலி ஆண்டாக துவக்கம்!!






மதுரை டிச 31

கத்தோலிக்க திருச்சபையின் உலகத்தலைவர் போப் பிரான்சிஸ் இந்த 2025ஆம் ஆண்டை கிறிஸ்து பிறப்பின் யூபிலி ஆண்டாக கொண்டாடும் படி அறிவித்துள்ளார்.

அதன் துவக்கமாக மதுரை கீழவாசல் சிஎஸ்ஐ தேவாலயத்தில் போதகர் ராஜா ஸ்டாலின் பவனியை ஜெபம் செய்து துவக்கி வைத்தார்.

மதுரை உயர்மறை மாவட்ட முன்னாள் பேராயர் அந்தோணி பாப்புசாமி தற்போதைய மதுரை உயர்மறை மாவட்ட பரிபாலகர் அந்தோணிசாமி சவரிமுத்து ஆகியோர் தலைமையில் கீழவாசல் சிஎஸ் ஐ தேவாலயத் திலிருந்து பவனியாக புறப்பட்டு கீழ வாசல் தூய மரியன்னை பேராலயத்தில் திருச்சிலுவை மந்திரிக்கப்பட்டு அதன் பின்னர் திருப்பலி நிறைவேற்றப்பட்டு யூபிலி ஆண்டை தூக்கி வைத்தார்.

இதில் மதுரை உயர்மறை மாவட்டத்தை சேர்ந்த அனைத்து பங்குகளை சார்ந்த பங்கு தந்தையர்கள் அருட் சகோதரிகள் பங்கு இறைமக்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து 2025ம் ஆண்டு கிறிஸ்துமஸ் வரை யூபிலி ஆண்டாக கடைபிடிக்கிறார்கள்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161